# ஓவியப்போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு

**■ சென்னை**

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மற்றும் சென்னை கலைப்பள்ளியுடன் இணைந்து நடத்திய ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மற்றும் சென்னை கலைப் பள்ளியுடன் இணைந்து சென்னை சென்ட்ரல், எழும்பூர், செஷனாய் நகர், அண்ணாநகர் கோபுரம், கோயம்பேடு, பரங்கிமலை, விமான நிலையம், சைதாப் பேட்டை, தேனாம்பேட்டை உட்பட 15 மெட்ரோ ரயில் நிலையங்களில் கடந்த 2-ம் தேதி ஓவியப் போட்டிகளை நடத்தியது.



▲ ஓவிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இதில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பொதுமேலாளர் (நிதி) ஆர்.முரளி பங்கேற்று, ஓவியப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

மெட்ரோ ரயில் அல்லது மெட்ரோ நிலையம் அல்லது மெய் நிகர் உண்மை என்ற தலைப்புகளில் 1,100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று ஓவியங்களை வரைந்தனர். இதில், தேர்ந்தெடுக்கப்பட்ட 20 ஓவியங்கள் மெட்ரோ பயணிகள் வாக்களிப்பதற்காக 15 மெட்ரோ நிலையங்களிலும் வைக்கப்பட்டன.

இதற்கிடையே, ஓவிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இதில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பொதுமேலாளர் (நிதி) ஆர்.முரளி பங்கேற்று, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.